www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் 1 ஏப்ரல் 1999

பொருளடக்கம்

1. சர்வதேச பெண்கள் தினம்
2. வாவிக்கரையோரம் .......
3. எங்கள் குரல்
4. சுனிலா அபயசேகர ........
5. கிழக்கிலிருந்து வெளிவரும் பெண்கள் சஞ்சிகை
6. சூரியாவின் குறிக்கோள்கள், செயற்பாடுகள்
7. துணிவுள்ள சிறுமி
8. கரங்களை உயர்த்தி - பாடல்
9. மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண்கள் கூட்டமைப்புக்கள்
10. கணனித் தகவல் பரிமாற்றம்

சூரியா பெண்கள்அபிவிருத்தி நிலையம் இச்செய்தி மடல் மூலம் ஒரு புதிய முயற்சியில் காலடி எடுத்து வைக்கிறது. கிழக்கிலிருந்து பெண்களால் வெளியிடப்படும் செய்தி மடலாக இது அமைகின்றது. பெண்கள் பற்றிய செய்திகள் என்றால் அவற்றை 'ஆண் நோக்கு' நிலையிலின்றும் பார்ப்பதி லிருந்து விடுபட்டு பெண்ணுக்கென உள்ள பார்வையில், அவளது மொழியில், அவளது செயற்பாடுகளைக் கூற முனைந்துள்ளது. பெண்கள் என்ன செய்தி றார்கள், என்று கேள்வி கேட்கும் ஒவ்வொருவரும் அவர்கள் என்ன செய்துள் ளார்கள் எனச் சிந்திக்க வைப்பதும் இதன் நோக்கமாகும்.

"வாருங்கள் தோழியரே வையகத்தை வெற்றி கொள்ள"

*ஆசிரியர்.*

## சர்வதேசப் பெண்கள் தினம் - 1999

இவ்வருடம் சர்வதேசப் பெண்கள் தினத்தை ஒட்டிய நிகழ்ச்சிகள் இலங்கையின் பல பாகங்களிலும் மிகத் தீவிரமாக நடைபெற்றன. கொழும்பு, பதுளை, கண்டி, திருமலை, ஹற்றன், நுவரெலியா, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் வெவ்வேறு பெண்கள் அமைப்புக்கள் இந்நிகழ்ச்சிகளை நடத்தின.

கண்டியில் மாற்று அபிவிருத்திக்கும் தொடர்பூடக செயற்பாட்டுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் "21ம் நூற்றாண்டில் பெண்கள்" னும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு நடைபெற்றது.

இதேவேளை கண்டியிலுள்ள "சமூக அபிவிருத்தி நிறுவனம்" சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடியது. இதில் 'பெண்ணடிமை ஒழிக', 'பெண்களுக்கு சமத்துவம் வழங்குக', 'பாலியல் வல்லுறவுகள் ஒழிக', 'பெண்கள் மீதான அடக்குமுறை, ஒடுக்குமுறைகள் ஒழிக' முதலிய சுலோக அட்டைகளை தாங்கி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அத்துடன் பெண்கள் தொடர்பான சித்திரக் கண்காட்சி, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு உட்பட பல வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. பெண்கள் பிரிவுப் பொறுப்பாளர் மேனகா நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தியுள்ளார். இதில் கண்டியின் பல பாகங்களிலும் உள்ள பெண்கள் கலந்து கொண்டனர்.

பதுளையில் "தபவர் பவுண்டேசனின்" ஏற்பாட்டில் சைமன் பீரிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் மகளிர் தினவிழா நடைபெற்றது. மகளிர் எழுச்சி பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவ் வைபவத்தில் பெண்ணிலைவாதிகளும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பங்குபற்றினர்.

திருகோணமலையில் இந்து இளைஞர் பேரவையின் ஆதரவில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் 'தமிழ் பெண்கள் பண்பாட்டுப் பவனி' நடைபெற்றது. ட்றைக்டரில் கொற்றவையை வைத்து பெண்கள் எல்லோரும் தீப்பந்தம் ஏந்தியபடி அணி வகுத்துச் சென்றனர். 'பயமற்று வாழ்வை மீண்டும் அடைந்திட அணி திரள்வோம்' என்று பெண்களுக்கு அழைப்பு விடுத்து பெண்கள் தினத்தைக் கொண்டாடினர்.

யாழ்ப்பாணத்தில் 'மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால்' இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்தில் பொருட்காட்சியும் இடம் பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் கனேடிய 'உலகப் பல்கலைக்கழக சேவையின் கிளை' சர்வதேசப் பெண்கள் தினத்தை ஒட்டி கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தியது. இப்போட்டி கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, அம்பாறை ஆகிய வலையங்களிடையே நடைபெற்றது.

அக்கரைப்பற்றில் அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளனம் பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. 'பெண்களுக் கெதிரான சகல விதமான வன்முறைகளையும் ஒழித்தல்' பெண்களது உரிமைகளைப் பாதுகாத்தல்' முதலியவை குறித்து ஆராயப்பட்டது. மகளிர் நலன் தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. தலைவி எஸ். ஆர்.யூ.உதுமா லெவ்வை தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






மட்டக்களப்பில் கிரானில் உள்ள கிராமிய அபிவிருத்தி நிறுவனமான ‘தடாகம்’ எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடத்தியது. இவ் ஊர்வலம் முறக்கொட்டாஞ்சேனையிலிருந்து கிரான் வரையும் நடைபெற்றது.

அக்கரைப்பற்றில் பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் சர்வதேசப் பெண்கள் தின நிகழ்வுகள் இரண்டு நாட்கள் நடைபெற்றன. கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் அக்கரைப் பற்றிலுள்ள Swoad நிறுவனத்திலும் சர்வதேசப் பெண்கள் தின நிகழ்வு கள் நடைபெற்றன.

கொழும்பில் சோசலிஷ மகளிர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து சர்வதேசப் பெண்கள் தினத்தை ஒட்டி மறியல் போராட்டத்தினை நடத்தியன. ‘யுத்தத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளைக் கண்டிக்கிறோம்’, ‘பெண்கள் மீதான சுரண்டலை நிறுத்து’, ‘தொழில் செய்யும் பெண்களுக்கு சம்பளத்தில் சமபங்கு’ முதலிய சுலோகங்களைத் தாங்கி ஐந்நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் பங்கு பற்றினர்.

மட்டக்களப்பு நகரில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினர் சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டி மார்ச் 7ஆம், 8ஆம் திகதிகளில் நிகழ்ச்சிகளை நடத்தியது. சூரியாவும், அதன் கிராமியச் சங்கங்களான குமாரபுரம் உழைக்கும் மகளிர் சங்கம், பூநொச்சிமுனை பெண்கள் சங்கம், நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம் முறக்கொட்டாஞ்சேனை பெண்கள் முன்னேற்றச் சங்கம் ஆகியவையும், கிழக்குப் பிராந்திய பெண்கள் கூட்டமைப்பும் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றின. மார்ச் 7ஆம் திகதி ஊர்வலமும், ஊர்தி அணியும் நடைபெற்றன. அம்மன்கிளி முருகதாசின் ஆரம்ப உரையுடன் இவ் ஊர்தி ஊர்வலம், சூரியா அலுவலகத்தில் ஆரம்பித்து நாவற்குடா, கொக்குவில் ஆகிய கிராமங்கள் வரை சென்று திரும்பியது. இவ் ஊர்வலத்தில் ஆறு ஊர்திகளும், வாகனங்களும், முன்னூறுக்கும் மேற்பட்ட பெண்களும் கலந்து கொண்டனர். ‘பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம்’, ‘சிறுவர் மீதான துஷ்பிரயோகத்தை நிறுத்துவோம்’, ‘பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே’, ‘வீட்டு வேலைகளில் ஆண்களும் பெண்களும் சமபங்கு வகிப்போம்’ முதலிய சுலோகங்களைத் தாங்கிச் சென்றனர்.



சர்வதேசப் பெண்கள் தினமான மார்ச் 8ஆம் திகதி சூரியா நிலையத்தினரால் ‘பெண்கள் தினக் கொடி’ வழங்கும் வைபவம் இடம்பெற்றது. மட்டக்களப்பிலுள்ள பாடசாலைகள், வங்கிகள், கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம், மாநகர சபை, சந்தை ஏனைய பொது இடங்களில் உள்ள குறிப்பாக பெண்களுக்கு கொடிகள் வழங்கப்பட்டன. அத்துடன் கலாசாரக் குழுவினரால் எழுதப்பட்டு, பாடப்பட்ட ஒலிநாடாவும் மாநகர சபை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

அரசாங்கம் பதுளை வின்சன் டயஸ் அரங்கில் மகளிர் தினத்தைக் கொண்டாடியது. மகளிர் பணியகம் ‘பெண்களுக்கு எதிரான சகலவிதமான வன்முறைகளையும் ஒழிப்பது’ என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு நிகழ்ச்சிகளை நடத்தியது. சுவரொட்டி, நடனப் போட்டிகள் நடைபெற்றன. சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டி திறமைகளை வெளிக்காட்டிய பத்துப் பெண்களுக்கு ஜனாதிபதி விருதும் வழங்கப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தினவிழா நுவரெலியா, பதுளை, ஹட்டன், தலவாக்கலை, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களில் நடைபெற்றன. சுத்தம், கல்வி என்ற வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தொடர்பு சாதனங்கள், பத்திரிகைகள் ஆகியவையும் இம்முறை சர்வதேசப் பெண்கள் தினத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. குறிப்பாக பெண்கள் பற்றிய கட்டுரைகள், கவிதைகளைப் பிரசுரித்தமை குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

# வாவிக்கரையோரம் வலைவீசி வாழ்ந்திருப்போர்.

மட்டக்களப்பு பிரதேசம் 25 மைல் நீளமான வாவியினால் சூழப் பட்டுள்ளது. இந்த வாவி பல்வேறு தொழில்களுக்கும் வாய்ப்பளிக்கிறது. மட்டக்களப்பு மக்களின் பிரதான தொழில்களில் ஒன்றாக மீன்பிடித் தொழில் அமைய இவ்வாவி வாய்ப் பளிக்கின்றது. வாவிக்கரையோரம் வாழும் பெண்களது தொழில் முயற் சிகளில் மீன்பிடி சார்ந்த தொழில் களும் முக்கியம் பெறுகின்றன. இவற்றுள் இறால், கூனி, மட்டி, மீன் பிடித்தல், மீன் விற்பனை செய்தல், கூனி விற்றல், இறால் விற்றல், மீனை காயவைத்து உலர்த்தல் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இந்தப் பெண்கள் மட்டக்களப்பு வாவிக்கரை, குளங்கள் முதலியவற் றில் மீன் பிடிக்கின்றனர். துணியால் மீன் பிடிப்பது தான் பெரும்பாலான பெண்களால் மேற்கொள்ளப்படுகின் றது. ஏனெனில் தோணி வலித்தல் கடினம் என்று கருதப்படுவதனா லாகும். ஒரு சிலரே தோணியில் சென்று மீன் பிடிக்கின்றனர்.



இவ்வாறு கஷ்டப்பட்டு பிடிக்கும் மீன்களை அன்றாடம் தமது உணவுக்குப் பயன்படுத்துகின்றனர். எஞ்சியதை கிராமியச்சந்தையில் விற்கின்றனர்.

இப்பெண்கள் மீன் பிடியை பகுதி நேரத்தொழிலாகவே மேற் கொள்கின்றனர். இதற்கு நேரப்பற் றாக்குறை, இரட்டைச்சுமை என்பன காரணமாகின்றன.

உபகரணங்கள் இல்லாமை யால், அவற்றை வாடகைக்கு எடுப் பதால் கிடைக்கும் இலாபத்தினை வாடகைக்குச் செலவிட வேண்டியுள் ளது. எனவே உபகரணங்களை வாங்க நிறுவனங்கள் உதவி செய் வதன் மூலமும், வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதன் மூலமும் ஓரளவு உயர்நிலையை அடைய முடியும்.


# "எங்கள் குரல்"

## சூரியா கலாசாரக் குழுவின் கண்காட்சி

கடந்த 9.2.99 அன்று சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் கலாசாரக் குழுவின் கண்காட்சி, மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. சூரியாவின் கிராமச்சங்கங்களின் தலைவியர்களது விளக்கேற்றல் வைபவத்துடன் ஆரம்பமானது.

கலை வடிவங்களினூடாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 1995 இலிருந்து இக்குழு செயற்பட்டு வருகின்றது. ஓவியப் பயிற்சிப்பட்டறை மூலம் தமக்குக் கிடைத்த பயிற்சியைக் கொண்டு ஓவியங்களைப் படைத்துள்ளனர்.






வாசுகி ஜெயசங்கரின் பயிற்சிப்பட்டறையில் கலந்து, தம் உணர்வுகளை ஓவியங்களாகத் தந்துள்ளனர். இவர்கள் தமக்குக்கிடைக்கக் கூடிய மண், கயிறு, புல், துணி, ஓலை, கழிவுப் பொருட்கள் என்பவற்றைக் கொண்டு அதிகமான ஓவியங்களைப் படைத்துள்ளனர்.

www.tamilarangam.net

# சுனிலா அபயசேகரா - மனித உரிமைப் பாதுகாப்பாளர்



விருதுபெறும் வைபத்தில் ஐ.நா.சபை செயலாளர் நாயகம் கோபி அனான், மேரி ரொபின்சன் ஆகியோருடன் சுனிலா.

சென்ற வருட இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பாதுகாப்பாளர் என்ற விருதினைப் பெற்ற ஐவரில் சுனிலா அபயசேகர ஒருவராவர். மனித உரிமைகளை முன்னெடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுபவர்களைக் கௌரவிக்கும் முகமாக ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஐக்கிய நாடுகள் சபை இவ் விருதினை வழங்குகிறது. ஏற்கனவே விருதுகளைப் பெற்றவர்களில் நெல்சன் மண்டேலா, மார்டின் லூதர் கிங், எலினோர் குஸ்வெல்ட் ஆகியோர் அடங்குவர்.

சுனிலா பன்முகத் திறமையும் ஆளுமையும் உள்ள பெண்: ஒடுக்கு முறைக்கெதிராக தனது இளமைக்காலம் முதல் செயலாற்றியவர். ஆரம்பத்தில் ஜே.வி.பி. அரசியலில் ஈடுபட்டபோதிலும் அவரது மாற்றுக் கருத்துகளுக்காகவும் ஜனநாயக விழுமியங்களுக்காகவும் அக்கட்சியிலிருந்து வெளியேறினார்.

1970ஆம் ஆண்டுகளிலிருந்து பெண்கள் உரிமைகளுக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டார். பல பெண்கள் அமைப்புகளின் ஆரம்புகர்த்தாவாகவும், செயல்வாதியாகவும் விளங்கும் சுனிலா, பெண்களும் தொடர்பூடகங்களுக்குமான கூட்டின இணைப்புக்குழுவினரில் ஒருவர்.

1992ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமான பெண்களின் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச ரீதியான இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். ஒவ்வொரு ஆண்டும் வியன்னாவில் நடக்கும் மனித உரிமைகள் மகாநாட்டில் இவ்விடயம் தொடர்பாக பங்கு பற்றி வருகிறார்.

சுனிலா கொழும்பில் இயங்கும் இன்போம் (Inform) மனித உரிமை கண்காணிப்பு அமைப்பின் இயக்குநராகப் பணிபுரிகிறார். இலங்கையில் மனித உரிமை நிலவரம் பற்றி இன்போம் வெளியிடும் Situation Report என்ற மாதாந்த அறிக்கை சர்வதேச ரீதியான அங்கீகாரம் பெற்றுள்ளது. 1992ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமான பெண்களின் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச ரீதியான இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

சார்ள்ஸ் அபயசேகர அவர்களின் புதல்வியான சுனிலா வடக்கு-கிழக்குப் பகுதியிலுள்ள பெண்கள் அமைப்புகள், மனிதஉரிமை அமைப்புகள் ஆகியவற்றுடனும் தொடர்புள்ளவர். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பவர். இத்தகைய ஒரு பின்னணியிலேயே சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகவும் அவர் அமைந்தார்.


சுனிலா ஒரு சிறந்த கலைஞர்; பாடகி; நடிகை; இரண்டு பிள்ளைகளின் தாயும் கூட.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கிலிருந்து வெளிவரும் 'பெண்கள்' சஞ்சிகை



பெண்களால் பெண்களுக்கென சஞ்சிகைகள் வெளிவருவது மிகக் குறைவு. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால் வெளியிடப்படும் 'பெண்' சஞ்சிகை இதனைப் பூர்த்தி செய்கிறது. 1997ஆம் ஆண்டில் இருந்து காலாண்டிதழாக வெளிவருகின்றது. உலகம் பற்றியும் தம்மைச் சுற்றி நிகழ்வன பற்றியும் பெண்கள் எவ்வாறு சிந்திக்கின்றனர் என்பதை வெளிப்படுத்துவது இச் சஞ்சிகையின் நோக்கமாகும்.

அத்துடன் பெண்களது எழுத்துக்களுக்கு களம் அமைத்தலும் இதன் பிரதான நோக்கமாகும். இது வரை எட்டு இதழ்கள் வெளியாகி உள்ளன. இச்சஞ்சிகையின் ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொருவர் கௌரவ ஆசிரியர்களாக அமைகின்றனர்.

பெண் சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் கூறும் கருத்துக்கள் பின்வருமாறு:

தொகுதி:2 இல:1

பெண்கள் அரசியல், சமூக, குடும்ப ரீதியாக அடக்கப்படுகின்றார்கள் என்பது சகலருக்கும் தெரிந்த(?) ஒன்றாயினும் அவர்களின் பிரச்சினைகளை வெளி உலகுக்கு அறிவித்தல் முக்கியமான பணியாகும். அந்த வகையில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகள் பெண்கள் அடக்குமுறையின் பிரதான வடிவங்களாகின்றன. இந்த வன்முறை பற்றிய பயமே பெண்களைக் கூட்டுக்குள் அடங்கச் செய்கிறது.......

பெண்கள் கூட்டைவிட்டு வெளியே வரவும், புதிய சிந்தனைகளை உள்வாங்கிக் கொள்ளவும் உதவக்கூடிய ஆக்கங்களும் உங்களுக்குத் தரப்படுகின்றன..........

தொகுதி:2 இல:2

பொதுவாகவே எழுத்துமொழி என்பது பெண்களுக்கு உரியதாக இருக்கவில்லை ஒருசில பெண்களே எழுத்து மொழியைத் தம் வசப்படுத்தியிருக்கிறார்கள். எழுத்தைப் பொதுத்தளங்களில் பயன்படுத்துவதற்குப் பெண்கள் தயங்குகின்றனர். எழுத்துமொழி எமது சமூகத்தில் உத்தியோகபூர்வமான மொழியாகக் கருதப்பட்டிருப்பதும் இதற்குக் காரணமாகும்.............

காலங்காலமாகப்பெண்களின் மொழி மூலமான ஆக்கங்களும், கருத்துகளும் பேச்சு மொழிமூலமே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.



பேச்சாகவும், தனிப்பட்ட தளத்திலும் இயங்கும் பெண்களின் மொழி பொதுத்தளத்திற்கு வர வேண்டும் என்பதும் 'பெண்'ணினது ஒரு குறிக்கோளாகும். எனவே தாமதத்தை நாம் பெரிய தடையாகக் கொள்ளாமல்தொடர்ந்து முன்னோக்கி நடக்கவே எண்ணுகிறோம்............

பெண் சஞ்சிகைக்கு நிரந்தர ஆசிரியராக ஒருவர் இல்லை. ஒவ்வொரு இதழையும் ஒவ்வொருவர் பதிப்பிக்கின்றனர். பெண்கள் இன்று தமது "மும்சுமை" (வீட்டு வேலை + வீட்டுக்கு வெளியேயான ஊதிய உழைப்பு + சமூகப்பணி) காரணமாக நேர நெருக்கடியை எதிர்நோக்கும் இக்காலகட்டத்தில் இது ஒரு வசதியான ஒழுங்காக இருக்கும் என நம்புகிறேன். அத்துடன் சூரியா நிலையத்தினரது பொது இலட்சியங்களுக்கும் கருத்துகளுக்கும் மாறுபடாதபடியும் அதேவேளை வேறுபாடுகளையும், தனித்தன்மைகளையும் 'பெண்' வெளிப்படுத்துவதற்கும் இது ஒரு பொருத்தமான ஒழுங்காக அமையும் என்பதும் எமது கருத்தாகும்.



தொகுதி:2 இல:3

பெண்கள், தமது சகித்துக் கொள்ள முடியாத வாழ்வனுபவங்களை யதார்த்த பூர்வமாக - எழுத்தினூடாக வெளிப்படுத்த முடியாதவாறு ஆணதிகாரத்துவப் போக்குடைய சமூகம் தடையாக உள்ளது. ஆனால் இன்றைய நிலையில் சில பெண்களாவது ஓரளவு எழுத்துத் தளத்தில் கால்பதித்துள்ளனர். இத்தகைய பெண்ணெழுத்தாளர்களை ஊக்குவிப்பதும், தொடர்ச்சியான பெண்ணெழுத்தாளர் பாரம்பரியத்தை உருவாக்குவதும் 'பெண்'ணின் கடமையாகும்.

தொகுதி:3 இல:2

பெண்களிற்கான சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது, அதிலும் பெண்களிற்கான மாற்றுக் கருத்தியலை மனதிற்கொண்டதான செயல் வாதத்திலீடுபடும் ஒரு நிறுவனத்தினர் சார்பில் வெளியிடுவது என்பது சாதாரண இதழியல் அனுபவத்திலிருந்து வேறுபட்டதாகும். ஆண் முனைப்பு கருத்தியல் சார்ந்ததாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எமது சமூகத்திற்குரியன வாக அணுகப்படும் போது, அச் சமூகச் சூழலினை மையப்படுத்திய வெளிப்பாடாக இச்சஞ்சிகை திகழ

www.tamilarangam.net

வேண்டும் என்ற அவா சார்ந்ததாக அமைகின்ற போது இவ்வனுபவம் காத்திரமானதாகின்றது.

உலகமாக அதியசத்தை வெளிப்படுத்துவது போல அல்லது சில கண்டுபிடிப்புக்களை உலகிற்குப் பறை சாற்றுவது போல ஒரு செய்தியை கட்டம் போட்டு வெளிப்படுத்துவது அங்கு கடினமான காரியமே. அது போல அவ்வாறு வெளிப்படுத்துவதுடன் காரியம் முடிந்துவிடாது நாங்கள் இதைச் செய்தோம் அதைச் செய்தோம் என மார்தட்டிக் கொள்வதும் முடியாத காரியமாகவே உள்ளது. பெண்கள் நிறுவனங்கள் என்ன செய்கின்றன? பெண்நிலைவாதிகள் என்ன செய்கின்றனர்? என்ற கேள்விகள் இம்மாதிரியான செய்திகளுடன் கேட்கப்படுகின்றபோது இதையே நாம் சொல்ல விரும்புகின்றோம். பெண்கள் சார்ந்த செயல் வாதம் என்பதும் இதழியல் என்பதும் சாதாரணமான அணுகுமுறைகளை முன் வைக்க முடியாதனவாகவே உள்ளன.

அவ்வகையில் சாதாரண உரையாடல்களிலும் ஏனைய பத்திரிகைகளிலும் வரும் இம்மாதிரியான கேள்விகள் பெண்கள் பிரச்சினைகள் தொடர்பான புரிந்துணர்வுடன் கேட்கப்படுவனவாக இருக்கின்றனவா என்பதே எமது கேள்வி. பெண்கள் எழுதுவது குறைவாக இருத்தல் என்ற பிரச்சனையை இல.2 இதழில் இதழாசிரியர் எடுத்துக் கூறியிருந்தார். எழுதுவது என்பது பிரச்சினையாக இருக்கின்ற அதே சந்தர்ப்பத்தில், வெளியிடுதல் என்பதும் பிரச்சினைக் குரியதாக பெண்களைப் பொறுத்தவரை அமைகின்றது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

தொகுதி:3 இல:3

மீண்டும் ஒரு இதழில் என் சகோதரிகளின் குரல்களை வெளிப்படுத்தும் மகிழ்வுடன் தொடங்குகிறேன். இது ஏழாவது இதழ். வாழ்த்துக்களோ, ஏச்சுக்களோ, விமர்சனங்களோ இன்றி, வெறும் காற்றில் வித்துக்களை விதைத்து விடும் செடிகளின் நம்பிக்கையுடன் தொடர்கிறோம்.

பெண்களின் அழகும் காதலும், தாய்மையும் எழுதப்படும் போது அவைபற்றி சிலாகிப்பது போன்று, அரசியலும் பொருளாதாரமும் அலசப்படுமளவுக்கு, பெண்கள் தமது உணர்வுகளையும், உலகுபற்றிய பார்வை, விமர்சனம் போன்றவற்றை வெளிப்படுத்தும் போது சில கிசுகிசுப்புக்களைத் தவிர பெரும் நிசப்தமே நிலவுகிறது.

# சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் குறிக்கோள்களும், செயற்பாடுகளும்.

1990களின் யுத்தத்தினால் பெருமளவு பெண்கள் பாதிக்கப்பட்டனர். இப் பெண்களைப் பற்றி ஆராய பல துறைகளிலும் அனுபவம் வாய்ந்த பெண்கள் கொழும்பிலே ஒன்றுகூடினர். இவர்கள் பாதிக்கப்பட்ட பெண்களைக் கருத்திற்கொண்டு உருவாக்கியதே சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமாகும்.

## குறிக்கோள்

"பெண்களை வலுவுள்ளவர்களாக ஆக்குவதன் மூலம், அவர்களை பொருளாதார, அரசியல், சமூக சுதந்திரம் மிக்கவர்களாக ஆக்குவதும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளற்ற சுதந்திரமான, சமத்துவமான, சமாதானமான சமூகமொன்றை உருவாக்குதல்"

## செயற்பாடுகள்

1990ஆம் ஆண்டில் உருவாகிய சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் ஆரம்பத்தில் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டது. இடம் பெயர்ந்து கொழும்பில் அகதி முகாம்களில் இருந்த பெண்களைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு தொழில் முயற்சிகள், மருத்துவ வசதிகள், பாலர் பாடசாலைகள், சிறுவர் சத்துணவு, புதினப்பத்திரிகைகள் வழங்குதல், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களை மீக்க உதவுதல், கடனுதவி, பயிற்சிப்பட்டறைகளை நடத்துதல்.

தற்போது மட்டக்களப்பில் இயங்கிவரும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது. "பெண்களை வலுப்படுத்தல்" என்ற சூரியாவின் நீண்டகாலத் தேவையை மனங்கொண்டு பின்வருவனவற்றை செயற்படுத்துகிறது.

பெண்கள் நிறுவனங்களிடையே கூட்டுப் பிணைப்பை ஏற்படுத்தல், கிராமியப் பெண்களை ஓர் சமூகமாக அணிதிரட்டல், பெண்கள் கலாசாரச் செயல்வாதக் குழுவை உருவாக்குதல், சட்ட உதவிகளை வழங்குதல், நூல், பிரசுரங்களை வெளியிடுதல், ஆவணப்படுத்தல், பெண்களது நிலை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

தூங்கிக் கிடக்கும்
துடிப்புக்களை எவ்வாறெனினும்
துயில் எழச் செய்ய வேண்டும்
துன்பம் சேர்க்கும்
இந்தத் துயிலில் இனித் தோய வேண்டாம்.

மௌனமாக,
மனதில் குமுறி
மாண்டு போகவும் வேண்டாம்
இந்தத் துயிலை எவ்வாறெனினும்
இல்லாதொழிக்க வேண்டும்.

அழுத்து,
மிக வேகமாய்.
சீறிப்பாயும் சூறைப் புயலில் வேகங்கொண்டு
அழுத்து இன்னும் வேகமாய்,
இந்தத் தூக்கம் மாளும் வரை
இன்பக் களிப்பு உயிர் பெறும் வரை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துணிவுள்ள சிறுமி

இன்றைய உலகம் முன்னேற்றகரமானதாக அமைந்தாலும், சிறுவர்களது நிலை பல சந்தர்ப்பங்களிலும் பின் தள்ளப்பட்டு வருகின்றது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், பாலியல் சேட்டைகள் செய்தல், பலாத்காரம் புரிதல், படிப்பைநிறுத்துதல், குடும்பப்பாரத்தினை அவர்கள் மீது சுமத்துதல் முதலியவற்றை கிராம மட்டத்திலிருந்து உலகளாவிய ரீதியிலும் காணமுடிகின்றன.

மட்டக்களப்பிலுள்ள ஒரு கிராமத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால் அடையாளம் காணப்பட்டவள் சத்தியா. இவளது குடும்பம் மிகவும் வறுமைப்பட்டது. இவளது தந்தை கூலி வேலை செய்பவர். இவரது உழைப்பு இவரது குடிக்கே செலவாகின்றது. இவளது தாயார் வீட்டு வேலை செய்பவர். இன்று சத்தியாவுக்கு வயது 15: இவளது படிப்பு பெற்றோரால் 8 வயதிலேயே (2ம் வகுப்பு) நிறுத்தப்பட்டுவிட்டது. இவள் குடும்பப் பொறுப்பை சுமக்க வேண்டியவளானாள். வீட்டைக் கவனிப்பதும், இளையவர்களின் உடுப்பு, சாப்பாடு முதலியவற்றை உரியபடி கவனிப்பதும் அவளது சம்பளமற்ற பொறுப்புக்களாக அமைகின்றன.

இன்று தனது பொறுப்புக்களின் மத்தியிலும் தனது விருப்பங்களை, திறன்களை, ஆளுமையை வெளிப்படுத்த பெண்கள் சங்கத்துடன் இணைந்துள்ளாள். இச்சங்கத்தின் 'எழுத்தறிவுத் திட்டத்தில்' எழுத்துப் பயிற்சியைத் தொடர்கிறாள். குடும்பப் பொறுப்புக்களில் சிக்குண்டு உளப் பாதிப்பை அடைந்திருந்தவள் இன்று சந்தோஷமாக செயற்பட்டு வருகின்றாள்.



இவளைப் போன்ற சத்தியாக்களை தனது சங்கச் செயற்பாடுகள் மூலம் வெளிக்கொணருவதுடன், அவர்கள் வலுவுள்ளவர்களாகவும், அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் சமத்துவம், சுதந்திரமிக்கவர்களாகவும் உருவாக வேண்டும் எனச் சூரியா விரும்புகிறது.

சிறுவர்களின் ஆர்வமும் ஆளுமையும் விருத்தி பெறுதற்கு வளர்ந்தவர்கள் உதவவேண்டும் ஆரோக்கியமான சமூகம் உருவாக வேண்டுமானால் எமது சிறுவர்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளையும், மதிப்பையும் அளிக்க வேண்டும். எதிர்கால சமூகத்தின் அங்கத்தவர்கள் இன்றைய சிறுவர்களே என்பதை நாம் உணர வேண்டும்.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண்கள் கூட்டமைப்புகள்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினரால் 1996ல் கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. கிழக்குப் பிராந்தியத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய விபரங்களை பரிமாறிக்கொள்ளவும், இவை தொடர்பான நடவடிக்கைகள், ஆலோசனைகள் பற்றிக் கலந்துரையாடவும், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இது மேலும் பெண்களுக்கு அறிவை ஊட்டுதல், பாதுகாப்பு வழங்குதல், நிறுவனங்களிடையே தொடர்பை ஏற்படுத்துதல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு ஒரு குரலாக எதிர்ப்புத் தெரிவித்தல், இவற்றை தேசிய, சர்வதேசிய மட்டத்திற்கு வெளிக்கொணரல், இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்படுகின்றன.

கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பின் அங்கத்துவ அமைப்புக்களாக சூரியாவுடன் இணைந்து பின்வரும் அமைப்புக்களும் செயற்படுகின்றன.

1. இந்து மகளிர் மன்றம் - திருகோணமலை
2. பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் - அக்கரைப்பற்று
3. உழைக்கும் மகளிர் அபிவிருத்தி மன்றம் - மட்டக்களப்பு
4. அம்பாறை மாவட்ட சமூக வாழ்வு அமைப்பு - அக்கரைப்பற்று

www.tamilarangam.net

5. நட்புறவாளர் ஒன்றியம் - மட்டக்களப்பு
6. கணவனை இழந்தோர் சங்கம் - பாண்டிருப்பு
7. பெண்கள் அபிவிருத்தி அரங்கு - மட்டக்களப்பு
8. மகா சக்தி நிறுவனம் - அக்கரைப்பற்று
9. உழைக்கும் மாதர் சங்கம் - நாவற்குடா கிழக்கு
10. கனேடிய உலக பல்கலைக்கழக சேவைகள் - மட்டக்களப்பு
11. அம்பிகா மாதர் சங்கம் - காரைதீவு
12. இளம் கிறிஸ்தவ மகளிர் அமைப்பு - மட்டக்களப்பு
13. பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் - அக்கரைப்பற்று

*கரங்களை இணைத்து பெண்களை காக்க*
*ஏற்ற வழி அமைப்போம்.*
*துயரம் என்றே ஒன்று இல்லை என்றே*
*நாம் கூவி அழைத்திடுவோம்.*

*வீட்டினுள்ளே நாம் முடங்கி இராமல்*
*வெளி உலகைக் காண்போம்.*
*விழிப்புடனே என்றும் இருந்து விட்டால் – புது*
*உலகையே கண்டிடுவோம்.*

*துகிலினை உரிந்த துயர்களையெல்லாம்*
*கனவாய் மறந்திடுவோம்.*
*தூக்கத்தில் இருக்கும் பெண்களை என்றும்*
*விழிப்புடன் வைத்திடுவோம்.*

*பொட்டின்றி பூவின்றி வெள்ளைத் துகிலுடன்*
*வாழ்வை எழுதினரே*
*விதைவை என்றே எமை விளித்திடும் உலகை*
*பிடுங்கியே எறிந்திடுவோம்.*

*பாரினில் வாழ்ந்திட வழி பல உண்டு*
*கரங்களை உயர்த்திடுவோம்.*
*நடந்தவை யாவையும் கனவென எண்ணி*
*கனலென நின்டெழுவோம்.*

*சூரியா கலாசாரக் குழு*

## பெண்கள் அமைப்புகளின் இணைப்புகளைச் சாத்தியமாக்கும் கணனித் தகவல் பரிமாற்றம்



ஐக்கியநாடுகள் சபையில் பெண்கள் அபிவிருத்தியையும், பெண்கள் உரிமையையும் முன்னெடுக்கும் மூன்று கிளைகள் உள்ளன. பெண்களின் முன்னேற்றத்துக்கான பிரிவு (DAW) யுனிபெம் (UNIFEM) இன்ஸ்ரோ (INSTRAW) ஆகிய இந்த மூன்று கிளைகளும் சேர்ந்து கணனி மூலமான தகவல் நிலையமொன்றை அமைத்துள்ளன. சர்வதேசரீதியாக பெண்கள் அமைப்புகளிடையே வலைப்பின்னல் தொடர்புகளை ஏற்படுத்துவதும் பெண்கள் பிரச்சனைகள் பற்றியும் தீர்வுத் திட்டங்கள் பற்றியும் விவாதிக்கவும் ஒரு தளமாக இது விளங்குகிறது. பெண்கள் உரிமைகளைக் கண்காணித்தல் எனப் பொருள்படும் வுமன் வோச் (Women Watch) என்பது பெயராகும். இதன் விலாசம் : http://www. un.org/women watch இது பற்றிய மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் Women watch @un.org.

மேற்கூறியது போலவே இன்ரர் பிறஸ் சேவிஸ் (IPS) என்ற சர்வதேச செய்தி ஸ்தாபனமும் பெண்கள் தொடர்பான தகவல்களை தனது கணனிச் சேவையில் சேர்த்துள்ளது. விலாசம் : http: /www.ips.org.




**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின்**
**புதிய அலுவலக முகவரி**
**46/2 பழைய வாடிவீட்டுத் தெரு,**
**மட்டக்களப்பு.**
**தொ.பே - 23297**

முகவரி: EDITOR
'SAMAR'
97, RUE DE COLOMBES
92600 ASNIERES SURSEINE
FRANCE




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்